15.11.2024

O.S.No.44/2013

வா.சா.1.திரு.சபியா த.பெ. வீரணன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

நான் காதகிணறில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்து காதகிணறில் அமைந்துள்ளது. தாவா சொத்தின் பழைய சர்வே எண் 47/6 புதிய சர்வே எண் 47/4 ஆகும். அதன் மொத்த விஸ்தீரணம் 48 சென்ட் ஆகும். நான்கு மால் எனக்கு தெரியாது. தாவா சொத்து எங்களது அனுபவத்தில் உள்ளது. 2012 ஆம் ஆண்டு வரை தாவா சொத்திற்கு நாங்கள் கிஸ்தி செலுத்தி உள்ளோம். அதன் பின்பு வழக்கு இருப்பதால் கிஸ்தி செலுத்தவில்லை. இந்த தாவாவை ஆரம்பத்தில் எனது தகப்பனார் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கை எனது தகப்பனார் எங்கள் இடத்தை தவறாக பதிந்து விட்டதால் தாக்கல் செய்துள்ளார். தவறாக பதிந்ததை ரத்து செய்ய கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்குபடி தாவா சொத்தின் பழைய சர்வே எண் 47/6 புதிய சர்வே எண் 47/4 ஆகும் என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்து சர்வே எண் 47/6 C என்றால் விபரம் எனக்கு தெரியாது. சர்வே எண் 47/6 மற்றும் சர்வே எண் 47/4 ல் கட்டுப்பட்ட சொத்துகள் வெவ்வேறு ஆனவை என்றாலும், நான் கூறுவது போல் ஒரே சொத்து இல்லை என்றாலும், சரியல்ல. சர்வே எண் 47/6 தான் தற்போது சர்வே எண் 47/4 என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல நான் அ பதிவேடு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ 21 கிஸ்தி ரசீது வழக்கிற்கு பிந்தைய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ 22 ஆவணத்தில் சர்வே எண் 47/4 ல் 48 சென்ட் என்றும், சர்வே எண் 47/6 ல் 85 சென்ட் எனவும் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே சர்வே எண் 47/4 ல் கட்டுப்பட்ட சொத்தும் 47/6 ல் கட்டுப்பட்ட சொத்தும் வெவ்வேறானவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 20 மற்றும் வா.சா.ஆ 22 ஆகியவை நான் எங்கு பெற்றேன் என்றால் என் தந்தை வாங்கி வைத்திருந்தார். சர்வே எண் 47/4 மற்றும் 47/6 ஆகியவற்றில் கட்டுப்பட்டுள்ள சொத்துகள் ஒன்றுதான் என்று காண்பிப்பதற்கு

நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கோரி நடவடிக்கை எடுக்க வில்லை என்றால் சரிதான். சர்வே எண் 47/4 கட்டுப்பட்ட சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் இதில் வாதிகளுக்கு எவ்வித உரிமையோ அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. தாவா முறையாக மதிப்பீடு செய்யப்பட்டு உரிய முத்திரை தான் செலுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.